DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.
Case No.CC 25/2023
Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்லப்பாண்டியன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| **Taluk** | **:** | **Age:** | |

Accused present.
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of _ 29.02.2024

முதல் விசாரணை:–

1. நான் கடலாடியில் குடியிருந்து சொந்தமாக மிட்டாய் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை பார்த்ததில்லை.

2. கடந்த 29.12.2022ம் தேதி எனது மனைவி அரையாண்டு விடுமுறைக்காக அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார். நான் வீட்டை பூட்டி விட்டு எனது அப்பாவின் வீட்டிற்கு சென்றுவிட்டேன். எனது மனைவி ஆசிரியையாக வேலை பார்த்து வருகிறார். எனது மகனும் மனைவியுடன் ஊருக்கு சென்று விட்டார்.

3. மறுநாள் 30.12.2022ம் தேதி காலை 06.00 மணியளவில் எனது வீட்டிற்கு வந்து பார்த்தபோது கதவில் பூட்டியிருந்து பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. பீரோ திறந்து கிடந்தது. நான் பக்கத்தில் வீட்டில் விசாரித்தபோது எனது வீட்டின் அருகில் உள்ள 4, 5 வீடுகளில் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததாக சொன்னார்கள். எனது வீட்டின் அருகில் உள்ள மாயக்கண்ணன், சங்கர், கருப்பசாமி ஆகியோரின் வீடுகளும் உடைக்கப்பட்டிருந்தது.

4. நான் சரிபார்த்தபோது பொருட்கள் எதுவும் திருடு போகவில்லை. பக்கத்து வீடுகளில் விசாரித்துவிட்டு அன்றையதினமே கடலாடி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு

என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

5. பின்னர் ஜனவரி மாதம் ஒருநாள் என்னை அழைத்து எனது வீட்டில் திருட முயற்சித்த நபர் கமுதி ஏரியாவைச் சேர்ந்த சேவுகராஜன் என்று போலீசார் சொன்னார்கள். அன்றையதினமும் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

1. காவல் நிலையத்தில் போலீசார் எழுதிக்கொடுத்த புகாரில் கையெழுத்து போட்டேன். என் வீட்டிற்கு வடக்கு பக்கம் காலி இடம் உள்ளது. அதற்கு அருகில் ஒரு சிறிய வீடு உள்ளது. அதில் சுதா என்பவர் குடியிருக்கிறார். என் வீட்டிற்கு மேற்கு பக்கம் வீடு இல்லை. கிழக்கு பக்கம் நாகலெட்சுமி என்பவர் குடியிருக்கிறார். தெற்கு பக்கம் வீடு இல்லை. சந்துதான் உள்ளது.

2. சம்பவம் நடந்த சமயத்தில் சுதாவும், நாகலெட்சுமியும் இல்லை. என் வீட்டிற்கு பின் பக்கம் மாயக்கண்ணன் வீட்டு கதவும் உடைக்கப்பட்டிருந்தது. அவரிடமும் கேட்டேன். அந்த இடம் முன் பக்கம் வீடு. பின்பக்கம் குடோன். அவருடைய குடோன் பூட்டுதான் உடைக்கப்பட்டிருந்தது.

3. என் வீட்டிற்கு பக்கத்தில் இருந்த செல்வராஜ் என்பவரிடம் கேட்டேன். தெரியாது என்று சொன்னார். செல்வராஜ் காவல் நிலையத்திற்கு என்னுடன் வரவில்லை. காவல் நிலையத்திற்கு நானும், எனது சித்தப்பா சண்முகம், என் அப்பாவும் சென்றோம். சண்முகத்திற்கு பூட்டு உடைத்த விபரம் தெரியும்.

4. என் வீட்டு பிரோவில் பணம், நகை இல்லை. என் வீட்டின் பூட்டு ஓரளவிற்கு தரமான பூட்டு. அதை சாதாரணமாக உடைக்கலாம்.

அந்த பூட்டை உடைத்தால் நல்ல சத்தம் கேட்கும் என்றால் அதுபற்றி தெரியாது.

5. என் வீட்டிற்கும், கிழக்கு புறமுள்ள வீட்டிற்கும் 10 அடி தூரம் இருக்கும். வடக்கு பக்கம் வீட்டிற்கும் 10 அடி தூரம் இருக்கும்.

6. இரும்பு ராடை கொண்டு பூட்டை உடைத்தால் 10 அடி தூரம் இருப்பவர்களுக்கு கேட்கும் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று இரவு சுதா அவரது வீட்டில் இல்லை. நாகலெட்சுமியும் அவரது வீட்டில் இல்லை. மறுநாளும் அவர்கள் இல்லை. 29ம் தேதி நான் வெளியே சென்று விட்டதால் சுதாவும், நாகலெட்சுமியும் வீட்டில் இருந்தார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது.

7. நான் கடை வீதியில் மிட்டாய் கடை வைத்துள்ளதால் போலீசாரின் தயவு எனக்கு தேவை என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.